# இரு வழிகள்

ஜீவவழி, மரணவழி

நான் உங்கள் முன்னே ஜீவவழியையும் மரணவழியையும் வைக்கிறேன். எரேமியா 21 : 8

அன்பார்ந்த சகோதரனே, சகோதரியே இந்த இருவழிகளில் எந்த வழியை நீர் தேர்ந்தெடுக்கிறீர். ஒருவழி ஜீவனுக்கும் (மோட்சத்திற்கும்) மற்றொருவழி மரணத்திற்கும் (நரகத்திற்கும் கொண்டு செல்கின்றது. ஆகையால் உன்வழி எது? ஜீவனுக்கு செல்லும் வழியா? அல்லது மரணத்திற்கு செல்லும் வழியா?

உலகத்திலே எல்லா நாடுகளிலும் பெருவாரியாக தெய்வீகக் கொள்கைகளும் சடங்குகளும், அநுசரிக்கப்பட்டு வருகின்றன. நமது தேசமோ மிகவும் தெய்வபக்தி நிறைந்த தேசம். இங்கு அநுசரிக்கப்படும் கொள்கைகள் மெய்சமாதானத்திற்கும், புண்ணியத்திற்கும், மோட்சம் செல்லும் வழியாகவும் கருதி பக்தி மான்களும் உலக ஞானிகளும் கைக்கொண்டு வருகிறார்கள். ஆனாலும் இதைக் குறித்து சத்திய வேதம் கூறுகிறதை கவனிப்போம்.

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு. அதன் முடிவோ மரணவழிகள். நீதிமொழிகள். 14 : 12.

எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது. எரேமியா. 17 : 9.

மனுஷனுடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷண மும், பெருமையும், மதிகேடும், அசுத்தமும், விக்கிரகாராதனையும், பில்லிசூனியமும், கோபங்களும், பகைகளும், விரோதங்களும், பிரிவினைகளும், மார்க்கபேதங்களும், பொறாமைகளும், வெறிகளும் களியாட்டுகளும், அநியாயங்களும், வஞ்சகங்களும் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. இப்பேர்பட்டவர்கள் மரண வழியில் செல்லுகிறவர்களாயிருக்கிறார்கள். மாற்கு. 7 : 21-22

கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழிவிசாலமுமாயிருக் கிறது. மத்தேயு. 7 : 13.

விரிவும் விசாலமுமாயிருக்கிற வாசல் வழியாய் செல்பவர் களின் முடிவு இவ்விதமாயிருக்கும்.

அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலும் இருக்கும். மாற்கு. 9 : 44.

அவர்கள் இரவும் பகலும் சதா காலங்களிலும் வாதிக்கப் படுவார்கள். வெளிப். 20 : 10.

ஆகவே சகோதரனே! சகோதிரியே! மரணவழியைவிட்டு ஜீவனுக்குப் போகிற வழிக்கு இயேசுகிறிஸ்து உம்மை அழைக் கின்றார்.

நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான். 14:6

ஏனென்றால் நீதியின் பாதையில் ஜீவன் உண்டு. அந்தப் பாதையில் மரணமில்லை. நீதிமொழிகள். 12 : 28.

அதன் வழிகள் இனிதான வழிகள். அதன் பாதைகளெல்லாம் சமாதானம். நீதிமொழிகள். 3 : 17.

ஜீவனுக்கு போகிறவாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது. மத்தேயு. 7 : 14.

அங்கே இனி மரணமுமில்லை துக்கமுமில்லை அலறுதலும், வருத்தமுமில்லை. வெளிப். 21 : 4.

ஆகையால் சகோதரனே, சகோதிரியே முதலாவது நீ பாவி என்று உணர வேண்டும். பின்பு நம் கர்ம பாவத்திற்காகவும் ஜென்ம பாவத்திற்காகவும் மெய்மனஸ்தாபப்பட்டு, கிறிஸ்து உன் பாவங்களுக்காக மரித்து மூன்றும் நாள் உயிரோடு எழுந்தார் என்று உன் உள்ளத்தில் விசுவாசித்து அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். I யோ. 1 : 9.

இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். I யோ. 1 : 7.

அவரில் நிலைத்திருப்பாயானால் மரணவழியை விட்டு நீங்கி ஜீவனுக்குப் போகும் வழியில் செல்லுகிறவனாயிருப்பாய். எப்படிப் பட்ட பாவியாயிருந்தாலும் என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை என்று இயேசு வாக்கு கொடுத்திருக்கிறார். யோவான். 6 : 37.

அந்த மெய்யான ஜீவவழியாகிய இயேசு கிறிஸ்துவை உன் இருதய தெய்வமாக ஏற்றுக்கொண்டு நீதியின் வழிகளிலும் நியாய பாதைகளிலும் நட, ஆட்டுக்குட்டியானவரின் ஜிவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்.
வெளி. 21 : 27.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது நீயும் உன் வீட்டாரனைவரும் இரட்சிக்கப்படுவீர்கள்.
அப்போஸ்தலர். 16 : 31.

இக்கைப்பிரதியை வாசிக்கும் அன்பார்ந்த சகோதரனே, சகோதிரியே இன்னும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைபற்றி அறிய விரும்பினால் கீழ்கானும் விலாசத்திற்கு எழுதவும்.

கர்த்தர் இயேசு உங்களை ஆசீர்வதிப்பாராக.

**The Light of Hope**
Cheppad P.O., Alappuzha Dist - 690 507
Kerala State, India